செ.வெ.எண்:205 நாள்: 25.03.2018

திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளி 21 வது ஆண்டு விழாவில் இசைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ரூ. 2.41 லட்சம் மதிப்பிலான விலையில்லா இசை கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

------

திருநெல்வேலி பாளையங்கோட்டை தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மைய கலை அரங்கில் திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளி மற்றும் சவகர் சிறுவர் மன்றம் சார்பில் 21 வது ஆண்டு விழா மற்றும் தமிழிசை விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.03.2018) நடைபெற்றது. இவ்விழாவில் இசைப்பள்ளி மாணவ, மாணவிகளில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இசைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.41 லட்சம் மதிப்பிலான நாதசுரம், பரதநாட்டிய ஒப்பனைப் பொருட்கள், தம்புராமின் சுருதி பெட்டி, குழித்தாளம், வயலின், மிருதங்கம் உள்ளிட்ட இசைகருவிகளை 34 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தது. குறுகியகால பயிற்சியிலேயே சிறப்பான கலை நிகழ்ச்சிகளை செய்து காண்ப்பிக்கப்பட்டுள்ளது. குற்றால சாரல் விழா, புத்தகத் திருவிழா உள்ளிட்ட பல்வேறு அரசு விழாக்களில் இசைப்பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. பாரம்பரிய கலைகள் தான் நமது கலாச்சாரத்தின் அடையாளமாகும். எதிர்கால சந்ததியினருக்கு நமது கலைகளை கொண்டு செல்ல வேண்டும். நீங்கள் சிறப்பாக கலைகளை கற்று கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு அவைகளை கொண்டு செல்ல வேண்டும். அரசின் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளின் அரசு இசைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வாய்பளிக்கப்படும். அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தேவையான பல்வேறு இசைக்கருவிகள் ரூ.2.41 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. மேலும். எதிர் காலத்தில் இசைப்பள்ளிக்கு தேவையான வசதிகள் அரசின் மூலம் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும். என பேசினார்.

இவ்விழாவில் அருங்காட்சியக மாவட்ட காப்பாட்சியர் திருமதி.சத்தியவள்ளி, இசைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. சிவகாம செல்வி, சவகர் சிறுவர்மன்ற திட்ட அலுவலர் திரு.சொக்கலிங்கம் மற்றும் இசைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி